DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.341/12

Deposition of Witness: PW 4

| | |
|---|---|
| Name விஜயகுமார் | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.10.2022

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் காவல்துறைகண்காணிப்பாளராக பணிபுரிந்து தற்போது பணிஓய்வு பெற்றுவிட்டேன். இதற்கு முன்பு 2007 ம் வருடம் தேனி மாவட்ட குற்றபிரிவில் ஆய்வாளராக இருந்த போது அரசு தேர்வு மண்டல இயக்குனர் மோகன் என்பவர் கொடுத்த புகார் மனு தபாலை பெற்று அப்போதைய சார்பு ஆய்வாளர் மீனாட்சிசுந்தரம் புகாரை பெற்று நிலைய குற்ற எண்.22/07 இதசபிரிவுகள் 416, 464, 471, 420, ன் கீழ் வழக்கு பதிவு செய்தார். முதல்விசாரணை முடித்து 10.12.07 ம் தேதி வழக்கை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நான் மேற்படி சார்பு ஆய்வாளர் விசாரித்த சாட்சிகளான மண்டல் துணை இயக்குனர் மோகன் மற்றும் முருகன், பெரோஸ்கான் மாவட்ட கல்வி அலுவலர் ஆகியோரை விசாரித்தேன் சார்பு ஆய்வாளரிடம் கூறியதை போலவே என்னிடம் சொன்னதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. வழக்கில் முழுமையாக விசாரணை செய்து 13.2.08 ம் தேதி எதிரிகள் ரகுவரன், செயலரசு ஆகியோர்கள் மீது மேற்கண்ட பிரிவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். முதல் தகவல் அறிக்கை அசாஆ, 5.

குறுக்கு விசாரணை

முதல் தகவல் அறிக்கையில் சம்பவ நிகழ்வு நாள் மார்ச் 2005 என காட்டபட்டுள்ளது என்றாலும் தேதி மற்றும் நேரம் குறிப்பிட்டு காட்டவில்லை என்றால் சரிதான். காவல்நிலையத்திற்கு தகவல் கிடைத்தது 6.8.07 ம் தேதி மாலை 3 மணிக்கு தகவல் கிடைத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை எதிரி ரகுவரன் மீது மட்டும் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாட்சி மோகன், பெரோஸ்கான், முருகன் ஆகியோர்களுக்கு அழைப்பாணை அனுப்பி நிலையத்திற்கு வரவழைத்து விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சார்பு ஆய்வாளர் விசாரித்த சாட்சிகளை நான் மீண்டும் விசாரித்ததாக வழக்கிற்காக கூறுகிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சாட்சிகளை எந்த தேதியல் விசாரித்தேன் என்று குறிப்பிட்டு கூறமுடியாது என்றால் 10.12.07 ல் நான் விசாரித்துள்ளேன். மேற்படி சாட்சிகளை விசாரித்து தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். 10.12.07 ல் சாட்சிகளை விசாரித்தாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்து 2 ஆண்டுகள் கழித்து தான் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சாட்சிகள் யாரையும்விசாரிக்காமல் குற்ற இறுதிஅறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எந்த குற்றசெயலிலும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல.